 

கடலூர் மாவட்டம், நெய்வேலி அருகே உள்ள – வடக்குத்து சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சென்னைக்கு வீராணம் குடிநீர் அனுப்பும் பணியினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. **கே.பி. முனுசாமி** அவர்கள் **18.7.2011** அன்று வடக்குத்தில் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு சிறப்பு பணிகள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. செல்வி ராமஜெயம் அவர்கள் , சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சொரத்தூர் இராஜேந்திரன் அவர்கள், திரு. சிவசுப்பிரமணியன் அவர்கள், திரு. முருகுமாறன் ஆகியோர் அருகில் உள்ளனர்.

செய்தி வெளியீடு எண்.12/2011 நாள்: 19.7.2011

## வீராணத்திலிருந்து சென்னைக்கு குடிநீர்

### மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு குடிநீர் வழங்கும் பணியினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

சென்னைக்கு வீராணம் ஏரியிலிருந்து குடிநீர் அனுப்பும் நிகழ்ச்சி நெய்வேலி அருகே உள்ள வடக்குத்து நீரேற்று நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் பங்கேற்று சென்னைக்கு குடிநீரை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சிறப்புப் பணிகள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. செல்வி ராமஜெயம் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய நிர்வாக இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் வடக்குத்து நீர்த்தேக்கத்திலிருந்து சென்னை வாழ் மக்களுக்கு குடிநீர் சுத்திகரித்து அனுப்பப்படும் விபரங்களை மாண்புமிகு அமைச்சர்களுக்கு விளக்கிக் கூறினார்.

பின்னர் மாண்புமிகு அமைச்சர்கள் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டனர். மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் குடிநீரை திறந்து வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் புதிய வீராணம் திட்டம் ரூபாய் 720 கோடி செலவில் தொடங்கப்பட்டு 18.10.2004 முதல் சென்னைக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வீராணம் ஏரியில் நீர் வரத்து குறைவு மற்றும் ஏரியில் தூர் வாரும் பணி மேற்கொண்டதால் வீராணம் ஏரியிலிருந்து 1.3.2011 முதல் சென்னைக்கு வழங்கப்படும் குடிநீர் நிறுத்தப்பட்டது. ஜூன் மாதம்

6ஆம் தேதி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி பாசனத்திற்காக மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. ஜுன் மாதம் 9ஆம் தேதி கல்லனைக்கு வந்தடைந்த தண்ணீர் கீழ் அணையிலிருந்து வடவாறு கால்வாய் மூலம் வீராணம் ஏரி நிரப்பப்பட்டு வருகிறது. வீராணம் ஏரியில் தற்போது 507 மில்லியன் கனஅடி தண்ணீர் உள்ளது. வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் வீராணம் ஏரிக்கு வந்து கொண்டிருக்கிறது. தற்போது வடக்குத்து சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னைக்கு வழங்கப்படும்.

18.7.2011 அன்று திறந்து வைக்கப்பட்ட தண்ணீர் 4 மணி நேரத்தில் சென்னை போரூர் குடிநீர் நிலையத்திற்கு சென்றடையும். இங்கிருந்து சென்னை வாழ் மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

தமிழகத்தில் உள்ள 6 கோடி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களான பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம் மற்றும் வீராணம் ஆகியவற்றில் தற்போது 6095 மில்லியன் கனஅடி நீர் உள்ளது. இது மொத்த கொள்ளளவில் 48.67 விழுக்காடு ஆகும். இதன் மூலம் சென்னை வாழ் மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் திரு. சொரத்தூர் இராஜேந்திரன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியன், காட்டுமன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. முருகுமாறன், சென்னைக் குடிநீர் வாரிய தலைமைப் பொறியாளர் திரு. ஆ. கதிரவன், மேற்பார்வைப் பொறியாளர் திரு. வி.வி. சேதுராமன், பொறியாளர்கள் மற்றும் வாரிய அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்